# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2063 - 2018 මාර්තු මස 16 වැනි සිකුරාදා - 2018.03.16

*2063 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 456 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 462 |


**கவனிக்க.-** (i) தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2018, மாச்சு மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2018, மாச்சு மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, மாச்சு மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

453-B81262 - 5403 (2018/03)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து **சிங்கள மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து **தமிழ் மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, **சிங்கள மொழி** :யில் அல்லது **தமிழ் மொழி** :யில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 **சிங்கள மொழி** : மூலத்தில் அல்லது **தமிழ் மொழி** : மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

*1.* ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

*2.* பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

*3.* பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

*4.* மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

*5.* பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

*6.* பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

*7.* வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

*8.* பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

*9.* ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

*10.* கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

*11.* பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

*12.* பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

*13.* பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

*14.* தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

*15.* பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

*16.* பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

உள்நாட்டலுவல்கள் அமைச்சு

**சட்ட அலுவலர் (நிருவாக உத்தியோகத்தர் III ஆம் வகுப்பு) பதவிக்கு திறந்தபோட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்தல்**

உள்நாட்டலுவல்கள் அமைச்சில் நிர்வாக சேவையின் வகுப்பு III சட்டஅலுவலர் பதவியொன்றுக்காக கீழே குறிப்பிடும் தகைமைவுள்ளவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**

வர்த்தமானி அறிவித்தலில் கேட்கப்படுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் நடாத்தப்படும் கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி உயரிய புள்ளிகளைக் பெற்றுக்கொண்ட அபேட்சகர் வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும். அங்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட (இல. 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிவழங்கும் விதிமுறைகளுக்கு ஏற்ப கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

**02. தேவையான தகைமைகள்**

(i) ***கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்***

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின்றிலிருந்து பெற்றசட்டம் சம்பந்தமான பட்டமொன்றை பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றமொன்றில் சட்டத்தரணியாக சத்தியம் செய்திருத்தல்.

(ii) ***அனுபவம்***

இலங்கை உயர் நீதிமன்றமொன்றில் சத்தியப் பிரமாணம் செய்ததன் பின்பு மூன்று ஆண்டுகாலத்திற்கு குறையாத முனைப்புமிகு தொழில்சார் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உடல் தகைமைகள் :**

(iii) சகல அபேட்சகர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமைபுரிவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு முரிய உடல் மற்றும் மனரீதியான ஆரோக்கியம் உடையவராதல் அவசியம்.

(iv) ***வேறு தகைமைகள்***

- இலங்கைப் பிரசையாக இருக்கவேண்டும்.
- விண்ணப்பதாரிகள் உயரிய நன்நடத்தையுடையவர்களாக இருக்க வேண்டும்.
- க. பொ. த. (சா.த.) அல்லது க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு குறைந்தது திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல்.
- பதவிக்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலில்/ வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடும் திகதிக்கு சகல தகைமைகளையும் எல்லாவகைகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**03. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துடனானதுமாகும். உங்களுக்குரித்தான ஓய்வூதியத் திட்டம் சம்பந்தமாக அரசாங்கம் எடுக்கும் கொள்கை ரீதியான முடிவுக்கு நீங்கள் கட்டுப்படவேண்டும். விதவைகள், தபுதாரர், அனாதைகள் நிதியத்துக்கு பங்களிப்புச் செய்யவேண்டும். அரசாங்கம் காலத்துக்குக் காலம் நியமம் செய்யும் வகையில் நீங்கள் பங்களிப்பு நிதியைச் செலுத்த வேண்டும்.

(ii) இப்பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் மூன்றாண்டுகால தகுதிகாண் காலத்திற்குற்பட்டதாகும் என்பதுடன் குறிப்பிட்ட மூன்றாண்டு (03) காலத்தில் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டற் பரீட்சையில் சித்தியடைதலும் வேண்டும்.

(iii) 2014.01.21 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி உரிய மொழித் தேர்ச்சியை பதவியில் சேர்ந்த 5 ஆண்டு காலத்திற்குள் பெற்றுக் கொள்ளவேண்டும்.

பொது நிர்வாக 07/2007 இலக்க சுற்று நிருபப்படியும் மற்றும் அதைத் தொடர்ந்து வந்த சுற்றுநிருபங்களின்படியும் சேவைக்கு/பதவிக்கு இணைந்த மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரசகருமமொழியைப் பற்றிய தேர்ச்சியையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(iv). இந்நியமனம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரசாங்க நிதிஒழுங்கு விதிகளுக்கும், அரசாங்கத்தால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்பட்டதாகும்.

04. **வயதெல்லை**

ஆகக் குறைந்தது 21 வயதுக்கும் ஆகக் கூடியது 45 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

05. ***சம்பள அளவுத் திட்டம்***:

இப் பதவிக்கு ரூபா 47,615 - 10 x 1,335-8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 110,895 (SL 1-2016) மாதாந்த சம்பள அளவுத் திட்டம் உரித்தாகும். (2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் உரித்தாகும்.)

06. கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வில் கீழ்க்காணும் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்:-

| தொடர் இல. | விடயம் | புள்ளிகள் | கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | **20** |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரித்த பல்கலைக் கழகமொன்றினால் பெற்றுக் கொண்ட சட்டம் சம்பந்தமான பட்டம். | | |
| | • 1 ஆம் வகுப்பு சித்திக்காக | 20 | |
| | • 2 ஆம் வகுப்பு மேல் தரம் | 15 | |
| | • 2 ஆம் வகுப்பு கீழ் தரம் | 10 | |
| | சட்டக் கல்லூரி இறுதியாண்டில் 1 ஆம் வகுப்புச் சித்தி | 15 | |
| | சட்டக் கல்லூரி இறுதியாண்டில் 1 ஆம் வகுப்புச் சித்தி | 10 | |
| | **குறிப்பு**:- உயர் தகைமையுடன் இறுதிப் பரீட்சை சித்தி பெற்றிருந்தால் மட்டும் 10 புள்ளிகள் வழங்கப்படவேண்டும். (உயரிய தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். பட்டம் மற்றும் சட்டக் கல்லூரி தகைமைகளுள் ஒன்று மாத்திரம்) | | |
| 02 | **மேலதிக தொழில்சார் தகைமைகள்** | | **15** |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றினால் வழங்கப்படும் குறிப்பிட்ட துறை சம்பந்தமாக ஒரு வருடத்துக்குக் குறையாத பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பாடநெறி அல்லது பட்டப்பின் படிப்பு சட்ட சம்பந்தமான டிப்ளோமா (ஒரு டிப்ளோமாவுக்கு 5 புள்ளிகள் வீதம்) | | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் அத்துறை சம்பந்தமாக 6 மாதத்திற்குக் குறையாத டிப்ளோமா பாடநெறிக்கு (ஒரு டிப்ளோமாவுக்கு 3 புள்ளிகள் வீதம்) | | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் அத்துறை சம்பந்தமாக 3 மாதத்திற்குக் குறையாத டிப்ளோமா பாடநெறிக்கு (ஒரு டிப்ளோமாவுக்கு 2 புள்ளிகள் வீதம்) | | |

| தொடர் இல. | விடயம் | புள்ளி கள் | கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 03 | **மேலதிக அனுபவம்**<br><br>சட்டத்தரணியாக அரச சேவையில் அல்லது தனியார் துறையில் முனைப்புமிகு அனுபவம் 6 மாதத்துக்கு கூடியதாகவும் ஒருவருடத்துக்கு குறைவாகவும் : 2 புள்ளி<br><br>ஒருவருடத்துக்கு 5 புள்ளிகள் வீதம் கூடுதலாக 30 புள்ளிகள்<br>(அடிப்படைத் தகைமைக்கு தேவையான சட்டத்தரணியாக சேவைசெய்த 3 வருட சேவையை தவிர)<br><br>(20 வருடத்துக்குக் குறையாத சேவையை பூர்த்திசெய்த சட்டத்தரணி ஒருவர் அல்லது சனாதிபதி சட்டத்தரணி ஒருவர் அல்லது நீதிபதி ஒருவரிடம் பெற்றுக் கொண்ட சான்றிதழ் மூலம் மேலதிக அனுபவத்தை உறுதிப்படுத்த வேண்டும். அங்கு சேவை செய்தகாலம் தெளிவாக குறிப்பிடப்பட்டிருப்பின் மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | | 30 |
| 04 | **ஆங்கில மொழித் தேர்ச்சி**<br><br>ஆங்கில மொழி மூலம் முதுமாணி பட்டம் /பட்டம்/முதுமாணி சட்டத்துறை பட்டம்/சட்டத்துறை பட்டம்<br><br>(சம்பந்தப்பட்ட பரீட்சை வினாப்பத்திரங்கள் யாவும் ஆங்கில மொழி மூலம் பதில் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்)<br><br>பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் ஆங்கில மொழி சம்பந்தமான டிப்ளோமா கற்கைநெறிக்கு (ஒரு வருடம் அல்லது 1500 மணித்தியாலங்கள்)<br><br>பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்று அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் ஆங்கில மொழி சம்பந்தமான சான்றிதழ் கற்கைநெறி ஒன்றுக்கு<br><br>● 6 மாதம்/720 மணித்தியாலங்கள்<br>● 3 மாதம்/360 மணித்தியாலங்கள் | 15<br><br>10<br><br>07<br>05 | 15 |
| 05 | **தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு**<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப்படிப்பில் பிரதானமான பாடமாக தொழில்நுட்பவியலைக் கற்றிருத்தல்.<br><br>அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் ஒரு வருடத்துக்கு குறையாத தகவல் தொழில்நுட்பம் தொடர்பான 1500 மணித்தியாலங்களை கொண்ட கற்கைநெறி ஒன்றுக்கு<br>அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி ஒன்றுக்கு<br><br>● 6 மாதம்/720 மணித்தியாலங்கள்<br>● 3 மாதம்/360 மணித்தியாலங்கள் | 15<br><br>10<br><br>07<br>05 | 15 |

| தொடர் இல. | விடயம் | புள்ளி கள் | கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| **06** | **நேர்முகப்பரீட்சையில் காட்டப்படும் திறமைகளுக்கு** | | **05** |
| | **மொத்தம்** | | **100** |

07. **அபேட்சகர்களின் அடையாளம்**

சகல வகைகளிலும் பூர்த்திசெய்து அனுப்பப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

நேர்முகத் தேர்வின்போது சகல சான்றிதழ்களையும் அதன் உரிய முறையில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் சமர்ப்பிக்க வேண்டும்.

நேர்முகத் தேர்வின் போது தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்கு கீழ்க்காணும் ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஆள் அடையாள அட்டை;

2. செல்லுபடியான கடவுச்சீட்டு.

08.

(அ) விண்ணப்பங்களை 2018.04.16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக கீழ்க்காணும் விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்ப வேண்டும். அத்தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07

(ஆ) விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் "உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சட்ட அலுவலர் (நிர்வாக சேவை III ஆம் வகுப்பு) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனக்குறிப்பிடப்படல் வேண்டும்.

(இ) விண்ணப்பப் படிவத்தில் வைக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்திபெற்ற நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவிவகிக்கும் அலுவலரொருவர், அல்லது 47,615 ரூபாவுக்குக் கூடிய வருடாந்த சம்பளத்தைக் கொண்ட அரச நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் அலுவலரொருவர் சான்றுப்படுத்தல் வேண்டும்.

(ஈ) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் கடமைபுரியும் அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை தான் கடமைபுரியும் திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பிக்கவேண்டும்.

(உ) இத்துடனுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அத்துடன் காணாமல் போகும் அல்லது தாமதமாகும் விண்ணப்பங்கள் தொடர்பாக எவ்விதமுறைப்பாடுகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மாதிரி விண்ணப்பப் படிவத்தில் பரீட்சையின் பெயர், சிங்களமொழி மூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் மொழி மூலமான விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடவும்.

09. **பொய்யான தகவல்களை வழங்குதல்:**

உங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது பொய்யான அல்லது பிழையான தகவல்கள் வழங்கப்பட்டிருப்பது தெரியவருமாயின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துசெய்யப்படலாம்.

பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

- நியமனம் செயல்படும் திகதி மற்றும் நியமனம் செய்யப்படுவோரது எண்ணிக்கையை அரசசேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்களின் சிலவற்றை அல்லது முழுவதையும் நியமனம் செய்யும் அதிகாரம் அரச சேவைஆணைக்குழுவைச் சார்ந்ததாகும்.

- இவ்வர்த்தமானி அறிவித்தல், சிங்களம், தமிழ், ஆங்கிலம், ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படுவதுடன் குறித்த மொழிகளின் சொற்களுக்கிடையில் ஏதேனும் இணங்காமை காணப்படின் சிங்கள மொழியின் சொற்றொடர்கள் வலுவிலிருக்கும் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

10. வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாமை அரசசேவை ஆணைக்குழுவைச் சார்ந்ததாகும்.

அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

மாதிரிவிண்ணப்பப்படிவம்

**உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு சட்ட அலுவலர்பதவிக்கு ஆட்சேர்ப்புசெய்வதற்கான**
**கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு - 2017**

| நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி | |
|---|---|

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

(குறித்த இலக்கத்தை கூட்டிற்குள் எழுதுக. சிங்களம் - 2/தமிழ் - 3)

(1) I முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
உ-ம் : GUNAWARDANA, M.G.B.S.

II முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் : ----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

III முதலெழுத்துக்களுடன் பெயர் : ----.
(சிங்களத்தில்/தமிழில்)

IV முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் : ----.
(சிங்களத்தில்/தமிழில்)

(2) முழுமையான விலாசம் :-

I நிரந்தர வதிவிட முகவரி : ----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

II நிரந்தர வதிவிட முகவரி : ----.
(சிங்களத்தில்/தமிழில்)

III நேர்முகத் தேர்வுக்காக கடிதம் அனுப்பப்பட வேண்டிய முகவரி : ----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

IV தொலைபேசி இலக்கம் : ----.

(3) ஆண்/பெண் : பெண் - 1
ஆண் - 0

(குறித்த இலக்கத்தைக் கூட்டிற்குள் எழுதுக)

(4) விவாகநிலை விவாகமானவர் -1
விவாகமாகாதவர் - 2

(குறித்த இலக்கத்தைக் கூட்டிற்குள் எழுதுக)

(5) I பிறந்த திகதி : ஆண்டு : மாதம்: திகதி :

II 2018.04.16 ஆந் திகதிக்குவயது : வருடங்கள்: மாதங்கள்: நாட்கள்:

(6) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

(7) நேர்முகத் தேர்விற்காக விண்ணப்பம் கோரும் அறிவிப்பின்படி பெற்றுக் கொண்டுள்ள கல்வித் தகைமைகள் பற்றிய விபரம்

| தகைமை | பெற்றுக்கொண்ட நிறுவனம் | பெற்றுக்கொண்ட திகதி |
|---|---|---|
| ..................... | ................................. | ................................. |
| ..................... | ................................. | ................................. |

(8) க.பொ.த (சா.த.) அல்லது க.பொ.த (உ.த.) ஆகிய பரீட்சைகளில் ஆங்கில மொழிக்குக் கிடைத்தசித்தி:

(9) உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட தினம் :

(10) விண்ணப்பம் கோரிய அறிவித்தலில் 06 இன் கீழ் ஒவ்வொரு தகைமையும் பெற்றுக்கொண்டமைக்கான விபரம்

| | தகைமை | பெற்றுக் கொண்ட நிறுவனம் | பெற்றுக் கொண்ட திகதி காலஅளவு |
|---|---|---|---|
| 1. | மேலதிக கல்வித்தகைமை | | |
| (i) | ..................... | ................................. | ................................. |
| (ii) | ..................... | ................................. | ................................. |
| (iii) | ..................... | ................................. | ................................. |
| 2. | மேலதிக தொழில் தகைமை | | |
| (i) | ..................... | ................................. | ................................. |
| (ii) | ..................... | ................................. | ................................. |
| (iii) | ..................... | ................................. | ................................. |
| 3. | மேலதிக அனுபவம் | | |
| (i) | ..................... | ................................. | ................................. |
| (ii) | ..................... | ................................. | ................................. |
| (iii) | ..................... | ................................. | ................................. |
| 4. | ஆங்கில மொழித் தேர்ச்சி | | |
| (i) | ..................... | ................................. | ................................. |
| (ii) | ..................... | ................................. | ................................. |
| (iii) | ..................... | ................................. | ................................. |
| 5. | தொழில்நுட்பம் தொடர்பான தேர்ச்சி | | |
| (i) | ..................... | ................................. | ................................. |
| (ii) | ..................... | ................................. | ................................. |
| (iii) | ..................... | ................................. | ................................. |

***(11) விண்ணப்பதாரியின் உறுதியுரை :***

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானதும், சரியானதெனவும் உறுதிப்படுத்துவதுடன் நேர்முகத் தேர்வு நடாத்துதல் மற்றும் பெறுபேற்றை வெளியிடுவது சம்பந்தமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வகுக்கப்படும் சகல ஒழுங்கு விதிகளுக்கும் கட்டுப்படுவேன் என உறுதிபகர்கிறேன்.

திகதி:....... ..........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

12) விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

மேலே குறிப்பிட்ட திரு. /திருமதி /செல்வி ........................................................................................ என்பவரை நான் அறிவேன் எனவும் இன்றைய தினம் எனது முன்னிலையில் கையொப்பமிடப்பட்டதெனவும் உறுதிபகர்கிறேன்.

..........................,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் முத்திரை.

பெயர் : ----.
பதவி : ----.
திகதி : ----.

3 - 609

---

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

இலங்கைத் தொழில்நுட்ப சேவைக்குரிய மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர்
தொழில் நுட்பம் அல்லாத /தொழில்நுட்ப சேவை வகையின் முகாரி (உயிரியல் மருத்துவ) பதவிக்கு
(திறந்த அடிப்படையில்) III ஆம் தர/பயிற்சி நெறிக்கு மாணவர்களை
இணைத்துக்கொள்ளுதல் - 2018

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் முகாரி (உயிரியல் மருத்துவ) III ஆம் தர/ பயிற்சி தரத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளுவதற்கு கீழ்க் குறிக்கப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து 2018.04.16 ஆந் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை திறமை அடிப்படையில் பயிற்சிக்கு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

02. **தகைமைகள் :**

2.1 கல்வித்தகைமைகள்:-

அ. தூயகணிதம், பிரயோக கணிதம், இணைந்த கணிதம், பௌதிக விஞ்ஞானம் ஆகியவற்றில் இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக ஒரே அமர்வில் 3 பாடங்களில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

ஆ. சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு க.பொ.த. (சா.த.) இல் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2.2 தொழிற்தகைமைகள் :-

(i) மொரட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப நிலையம் என்பவற்றினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப (மின்னியல்/மின்சாரம்) டிப்ளோமா சான்றிதழ்;

அல்லது

(ii) தேசிய தொழிற்பயிற்சி மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் விஞ்ஞான தேசிய டிப்ளோமா (மின்னியல்/மின்சாரம்) டிப்ளோமா;

அல்லது

(iii) இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் ஒன்றினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப (மின்னியல்/ மின்சாரம்) டிப்ளோமா;

அல்லது

(iv) கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட பொறியியலாளர் உயர் தேசிய டிப்ளோமா (மின்னியல்/ மின்சாரம்);

அல்லது

(v) இலங்கை பொறியியலாளர் தாபனத்தினால் நடாத்தப்பட்ட பொறியியலாளர் பரீட்சையில் 1ஆம் பகுதி சித்தியடைந்திருத்தல்;

**குறிப்பு**:

மேற்படி கல்வித்தகைமைகள் மற்றும் தொழிற்தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளின் பரீட்சைத் திறமைக்கு அமைய தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு முகாரி (உயிரியல் மருத்துவ) III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

மேற்குறித்த கல்வித்தகைமைகளை மாத்திரம் பூர்த்தி செய்துள்ள மற்றும் தொழிற்தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளின் பரீட்சை திறமைக்கு அமைய தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு முகாரி (உயிரியல் மருத்துவ) பயிற்சி தரத்திற்கு இணைத்துக்கொள்ளப்படுவர்.

3. எதிர்பார்க்கப்படும் தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளுக்கு போட்டிப்பரீட்சை நடாத்தி அதில் அதிகூடிய புள்ளிகளை பெறுகின்ற விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு III ஆம் தர/பயிற்சித் தரத்திற்கு தெரிவு செய்யப்படும். III ஆம் தரத்திற்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு போதியளவு இல்லாத விடத்து, எஞ்சிய வெற்றிடங்களுக்கு பயிற்சித்தரத்திற்கு உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் பயிற்றுவிக்கும் தரத்திற்கு உள்வாங்கப்படுவர்.

3.1 பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சிக்காலம் ஒரு வருடகாலமாகும். பயிற்சிக் காலத்தின் பின்னர் நடாத்தப்படும் இறுதிப்பரீட்சையில் சித்தியடையும் பயிலுனர்கள் முகாரி (உயிரியல் மருத்துவம்) உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு நியமனம் செய்யப்படுவார்கள்.

3.2 பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுனர்கள் பயிற்சிப் பாடசாலைகளில்/ நிறுவனங்களில் நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்கள் மற்றும் சுகாதார அமைச்சினால் காலத்திற்குக் காலம் நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய கட்டளைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும். பயிற்சிக்காலத்தில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலையும் நடத்தையும் திருப்திகரமாக இல்லாவிட்டால் அல்லது தமது பயிற்சிப் பாடசாலையினது பரீட்சை மற்றும் விடுமுறை நிபந்தனைகளுக்கு அமையத் தவறும் பயிலுனர்கள் பயிற்சியின் எந்தச் சந்தர்ப்பத்திலும் எதுவித நஷ்டஈடுமின்றி பயிற்சியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

3.3 பயிற்சிப் பாடசாலைகளுக்கு சேர்த்துக்கொள்ளப்படும் போது பயிலுனர்கள் தாம் இடையில் வெளியேறாது பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பதாகவும், பயிற்சியை முடித்துக் கொண்ட பின்னர் நியமனம் வழங்கப்பட்டால் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு மற்றும் மாகாண சபைகளின் நிர்வாகத்திலுள்ள வைத்தியசாலைகள்/ தாபனங்களில் குறைந்த பட்சம் 10 வருடங்கள் சேவை செய்வதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தமொன்று செய்து கொள்ள வேண்டும். பயிற்சி பெறும் காலத்தில் அவர்கள் பயிற்சியை விட்டு விலகினால் அல்லது பயிற்சியிலிருந்து வாபஸ் பெற்றால் மேலே 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் பயிற்சியிலிருந்து நிறுத்தப்பட்டால் பயிற்சிக் காலத்தின் போது அவருக்கு வழங்கப்பட்ட படிகளையும் மற்றும் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவினங்களையும்

அவர் சுகாதார அமைச்சுக்கு மீளளிக்க வேண்டும். அல்லாவிடில் ஒப்பந்தத்தில் கூறப்பட்டவாறு சம்பளத்தை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படும். (III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் பயிலுனர்களும் குறைந்த பட்சம் 10 வருடங்கள் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு அல்லது அதன் கீழுள்ள வைத்தியசாலைகள்/ தாபனங்களில் சேவை செய்வதாக சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தமொன்று செய்து கொள்ள வேண்டும்.)

3.4 இப் பயிற்சி நெறி ஒரு முழுநேரப் பயிற்சி நெறியாகும். எனவே பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் அல்லது வேறு அரச நிறுவனத்தில் அல்லது வேறு நிறுவனத்தில் முழுநேர பயிற்சிநெறிகளில் ஈடுபட்டுள்ளோர் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கக்கூடாது. யாராவது அவ்வாறு விண்ணப்பித்து பின்பு ஒரு சந்தர்ப்பத்தில் தெரிய வந்தால் பயிற்சி நெறியிலிருந்து/ பதவியிலிருந்து விலக்கப்பட்டு அக்காலப்பகுதிவரை அரசினால் செய்யப்பட்ட எல்லா செலவுகளும் அறவிடப்படும்.

04. **வேறு தகைமைகள்** :-(i) இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும்.
(ii) நல்லொழுக்கமுடையவராயிருத்தல் வேண்டும்.
(iii) சிறந்த உடல், உள ஆரோக்கியமிக்கவராகவிருத்தல் வேண்டும்.

05. **பரீட்சை விபரம்.**

| பாடம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்யடைய பெற வேண்டிய புள்ளிகள் | விடயம் |
|---|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 02 மணித்தியாலம் | 100 | 40% | விண்ணபதாரர் சேவைக்கு எவ்வளவு தகுதியுடையவர் என்பதைப் பரீட்சிக்கும் வகையில் வினாத்தாள் தயாரிக்கப்பட்டிருக்கும். |
| விடயம் தொடர்பான தொழில்நுட்பப் பரீட்சை | 01 1/2 மணித்தியாலம் | 100 | 40% | உரிய பதவிக்குத் தேவையான தொழில் நுட்ப அறிவைப் பரீட்சிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கும். |

06. **சம்பளத் திட்டம்:**

பயிற்சி வழங்கும் தரம்: பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 (II) இன் அட்டவணை V இற்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

III ஆம் தரம் : ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550 (மாதாந்தம்)
MN - 3 - 2006 (A), (பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 அட்டவணை II இற்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.)

07. **வயதெல்லை.** - விண்ணப்பதாரி 2018.04.16 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாத 30 வயதுக்கு மேற்படாத இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

08. **சேவைக்கு அமர்த்தும் நிபந்தனைகள்:**

(i) நியமனம் வழங்கப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கு விருப்பமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(ii) நியமனம் நிரந்தரமானது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதிய சம்பள முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர் காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு கட்டுப்படல் வேண்டும். அத்துடன், நீங்கள் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு/ தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(iii) பயிற்சிக்கு இணைக்கப்படும் பயிலுனர்களின் திறமை பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் இறுதிப்பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். அவ்வாறு பெற்றுக்கொள்ளும் திறமை மற்றும் வெற்றிடங்கள்

நிலவுகின்ற நிறுவனங்கள்/மாகாணத்திற்காக உங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் விருப்ப தெரிவிப்பிற்கு அமைய வெற்றிடங்கள் நிலவுகின்ற சேவை நிலையங்களுக்கு நியமிக்கப்படும். நீங்கள் கட்டாயமாக நியமிக்கப்படும் சேவை நிலையத்திற்கு சேவைக்கு சமுகமளித்தல் வேண்டும். அது தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் எக்காரணத்தைக்கொண்டும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

09. அரசாங்க /அரச சார்பு நிறுவனங்களில் சேவையாற்றுபவர்கள் தமது திணைக்களத்தில் /தாபனத்தின் தலைவர் ஊடாக விண்ணப்பம் சமர்ப்பித்தல் வேண்டும்.

10. இந்த அறிவித்தலுக்கு அமையாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

11. விண்ணப்பங்கள் பெற்றுக் கொண்டமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

12. தேவையான தகைமைகளையுடையவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அழைக்கப்படுவதுடன், இது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிட்ட விலாசத்திற்கு அறியத்தரப்படும்.

13. **விண்ணப்பிக்கும் முறை:**

(அ) விண்ணப்பதாரிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை பின்வரும் விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் எந்தவொரு தனிப்பட்ட உத்தியோகத்தரது பெயருக்கும் அனுப்பக்கூடாது.

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதித்திகதி 2018.04.16 ஆகும்.

(இ) விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "முகாரி (உயிரியல் மருத்துவ) பதவி (திறந்த அடிப்படையில்) பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளல் - 2018" என குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஈ) பரீட்சைக் கட்டணம் : ரூபா 300.00 ஆகும். இலங்கை வங்கியில் தப்ரபேன் கிளையில் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரிலுள்ள 7041318 எனும் கணக்கிலக்கத்திற்கு கணக்கு வைத்தல் வேண்டும். இந்த நிதியை எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை மாதிரி விண்ணப்பப்படிவத்தில் இலக்கம் 13 இன் கீழ் உள்ள பெட்டியினுள் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். (பணம் மற்றும் முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

விலாசம்: பணிப்பாளர் (நிர்வாகம் 07),
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
"சுவசிறிபாய"
385, சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10.

14. **கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்**. இலங்கை நிர்வாக சேவை/கல்வி நிர்வாக சேவை/அரசாங்க கணக்காளர் சேவை உத்தியோகத்தர்கள்/அரசாங்க பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி அல்லது ரூபா 240,360 இற்கு குறையாத ஆண்டு சம்பளம் பெறும் நிரந்தர ஓய்வூதியத்திட்டத்திற்குரிய பதவி வகிக்கும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியினால் கையொப்பம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

**கவனிக்க வேண்டியவை:**

- விண்ணப்பத்தின் எல்லா பிரிவுகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அத்தகவல்கள் சரியானவை என்றும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

- மேற்குறித்தபடி சேர்த்துக்கொள்ளப்பட்ட யாவரும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான சகல சட்டதிட்டங்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை விதிமுறைகள், இலங்கைத் தொழில் நுட்ப சேவைக் குறிப்பு விதிமுறைகள் மற்றும் சட்டதிட்டங்களுக்கும், சுகாதார அமைச்சினால் விதிக்கப்படும் கொள்கைகளுக்கும் நிதிப்பிரமாணங்கள் மற்றும் பிரமாணங்களுக்கும் அரசினால் காலத்துக்குக் காலம் நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய கட்டளைகளுக்கும் உட்படுவார்கள்.

- இந்த ஆட்சேர்ப்பு தொடர்பில் இந்த பொது சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அல்லது உள்ளடக்கப்படாத ஏதாவது விடயங்கள் தொடர்பில் சிக்கல்கள் தோன்றினால் அது தொடர்பாக சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானம் ஆகும். அத்துடன் இவ் வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவித்தல்களில் வேறுபாடுகள் காணப்படின் சிங்கள மொழி அறிவித்தலே அதிகாரபூர்வமானதாகும்.

- இப் பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது தனிப்பட்ட முறையில் ஈடுபடுதல் தொடர்பாக உரிமைகள் ஏதும் இல்லை. இதே போன்று பயிற்சியின் பின்னர் குறித்த பதவியில் நியமனம் பெறின் அதன் பின்னர் தனிப்பட்ட சேவையில் ஈடுபடுவதற்கு எதுவித உரிமைகளும் கிடையாது. இது சம்பந்தமாக தெரியவருமிடத்து சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனக்க சுகததாஸ,
செயலாளர்
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய
அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
"சுவசிறிபாய",
385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10.
2018, பெப்புருவரி 22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு**

இலங்கைத் தொழில்நுட்ப சேவைக்குரிய மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர்
தொழில் நுட்பம் அல்லாத /தொழில்நுட்ப சேவை முகாரி (உயிரியல் மருத்துவ) பதவிக்கு
(திறந்த அடிப்படையில்) III ஆம் தர பயிற்சி நெறிக்கு மாணவர்களை இணைத்தல் - 2018

பரீட்சைக்குத் தோற்றும் மொழி : வதிவிட மாவட்டம்:

சிங்களம் - S ☐

தமிழ் - T ☐

ஆங்கிலம் - E ☐

01. i. முதலெழுத்துக்களுடன் பெயர்:-----.
(தமிழில்)
ii. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):-----.
iii. முழுப் பெயர் (தமிழில்):-----.
iv. முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):-----.

02. நிரந்தர வதிவிட விலாசம்:
i. தமிழில்:-----.
ii. ஆங்கில பெரிய எழுத்துக்களில் :-----.

03. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
தொலைபேசி இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐

04. இலங்கைப் பிரஜையா என்ற விபரம்:-----.

05. பால்:-----.

06. தமது நிரந்தர வதிவிடமாக விண்ணப்பதாரி குறிப்பிடும் மாவட்டம்:-----.

07. தேர்தல் தொகுதி:-----.

08. பிறந்த திகதியும் இடமும்:-----.

2018.04.16 ஆந் திகதியன்று வயது :- வருடங்கள் : | | | | மாதங்கள்: | | நாட்கள்: | |

09: விவாகமானவரா/விவாகமாகாதவரா? :-----.

10. கல்வித் தகைமைகள்:

(அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரணப்) பரீட்சை :-

வருடம்:............................ பரீட்சை சுட்டிலக்கம்:............................

| விடயம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சை:

வருடம்:............................ பரீட்சை சுட்டிலக்கம்:............................

| விடயம் | தரம் |
|---|---|
| | |
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

(இ) அறிவித்தலில் 2.2 இற்கமைய பெற்றுக்கொண்ட தொழில்நுட்ப தகைமை: ..................................................................
......................................................................................................................................................

(ஈ) வேறு விஷேட தகைமை மற்றும் அனுபவம்:
......................................................................................................................................................
......................................................................................................................................................

11. எப்போதாவது எந்தவொரு குற்றச்செயலுக்காகவும் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா? (ஆம் எனில் விபரம் தருக)
......................................................................................................................................................
......................................................................................................................................................

12. இவ் விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானதெனவும் சரியானவை எனவும் உறுதி மொழிகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலும் உண்மையற்றதெனவும் அல்லது பிழையானவை எனவும் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னராயின் எதுவித நட்டஈடுகளும் இன்றி சேவையிலிருந்து நான் நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை ஏற்றுக்கொள்ளுகின்றேன்.

| |
|---|
| இலங்கை வங்கியில் ரூபா 300 நிதி செலுத்தி பெறப்பட்ட பற்றுச் சீட்டை கழறாதவாறு ஒட்டவும். |

.........................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி:-----.

13. **கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:**

இவ் விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ள திரு./ திருமதி/ செல்வி ..................................... என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், அவர் ......................... திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.........................................,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி:..................................................

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர்:-----.
பதவி :-----.
(பதவி முத்திரையுடன்)
விலாசம் :-----.

3 - 646

---

## இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் III, வகுப்பு 3 இன் தரம் II , வகுப்பு 3 இன் தரம் I, வகுப்பு 2 இன் தரம் II , வகுப்பு 2 இன் தரம் I என்பவற்றின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைகள் - 2017 (II)

1.0 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் III, வகுப்பு 3 இன் தரம் II, வகுப்பு 3 இன் தரம் I, வகுப்பு 2 இன் தரம் II, வகுப்பு 2 இன் தரம் I என்பவற்றின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2017 (II) பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி தொடக்கம் 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி வரை வார இறுதி நாட்களில் கொழும்பில் நடாத்தப்படுமென இத்தால் அறியத் தருகின்றேன்.

2.0 (அ) இப் பரீட்சைகள் 1894/26 மற்றும் 2014.12.26 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை பிரமாணத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடாத்தப்படும்.

(ஆ) முன்னரான பதவியின் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் வினைத்திறன் காண் தடை தாண்டல் தொடர்பாக குறிப்பிடாதவிடத்து அல்லது நியமனக் கடிதத்தில் வினைத் திறன்காண் தடை தாண்டல் தொடர்பாக குறிப்பிடாதவிடத்து, அவற்றை பூர்த்தி செய்யாத அலுவலர்கள் இருப்பின் உரிய வகுப்பில் உரிய தரத்திற்கு ஏற்புடையதான வினைத் திறன்காண் தாண்டல்களை மேற்குறிப்பிடப்பட்டுள்ள சேவைப் பிரமாணக் குறிப்பு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி தொடக்கம் மூன்று ஆண்டு (03) சலுகை காலப் பகுதியினுள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

03. மேற்படி குறித்த சேவைகளுக்கு ஏற்புடையதாக நடாத்துவதற்கு உரியதான வினைத் திறன்காண் தடை தாண்டல் பரீட்சைகள் பின்வருமாறாகும்:-

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | குறியீட்டு பெயர் |
|---|---|---|
| 01. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 இன் தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | SLICT3III |

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | குறியீட்டு பெயர் |
|---|---|---|
| 02. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 இன் தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | SLICT3II |
| 03. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 இன் தரம் I இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | SLICT3I |
| 04. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | SLICT2II |
| 05. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் I இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | SLICT2I |

4.0 இப்பரீட்சை தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். இந்த சட்டங்களை மீறினால் ஒழுக்காற்று அதிகாரியால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

5.0 இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தல் இணையத்தளம் (internet) ஊடாக கணினியுடன் நேரடித் தொடர்பு மூலம் (Online) இலங்கை அபிவிருத்தி நிருவாக நிர்வாகத்தின் உத்தியோகபூர்வ இணைய தளமான www.slida.lk இணையத் தளத்தின் மெனு பட்டியில் Examination உப மெனு பட்டியை திறந்து தமக்கு ஏற்புடையதான பரீட்சையை தெரிவு செய்வதன் மூலம் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்ய முடியும். பரீட்சை விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்தல் 2018.03.16 ஆந் திகதி மு. ப 8.00 மணி தொடக்கம் 2018.04.02 ஆந் திகதி நள்ளிரவு 12.00 மணி வரையிலான காலப் பகுதியில் மட்டும் மேற்கொள்ளலாம்.

6.0 **பரீட்சைக் கட்டணம்** – முதற் தடவையாக இப்பரீட்சைக்கு தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணம் எதனையும் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. எவ்வாறாயினும் இதற்குப் பின்னரான தடவைகளில் அலுவலர்களினால் ஒரு பாடத்துக்கு மேல் தோற்றுவதாயின் ரூபா. 500/- ஐ பரீட்சைக் கட்டணமாகவும், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் கட்டணமாக ரூபா. 300/- இனையும் செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்தினை இலங்கை பூராக அமைந்துள்ள எந்தவொரு தபாலகத்தின் மூலம் (உப தபாலகங்கள் தவிர) அல்லது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளமான www.slida.lk ஊடாக கடன் அட்டை மூலமாக (Credit cards) 'SLIDA' விற்கு செலுத்தப்பட வேண்டும் என்பதோடு அச்செலுத்தலிற்கு உரித்துடைய பற்றுச்சீட்டில் இலக்கத்தினை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த தபாலகத்தில் 'SLIDA' கணக்கிற்கு பணம் செலுத்துவதற்கு காசுக்கட்டளை விண்ணப்பத்தினை (அ.அ.சீ85) ஆம் இலக்கத்துடைய மாதிரிப் படிவத்தினை நிரப்பும் போது, பணத்தினைப் பெற்றுக்கொள்பவர் ' SLIDA' எனவும், பணத்தினைப் பெற்றுக்கொள்பவரின் முகவரி என்னும் இடத்தில் உமக்கு உரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரினையும் குறிப்பிடவும். (குறியீட்டுப் பெயர்கள் 03 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்.)

மேலும் கணக்கிற்கு பணம் செலுத்தும்போது பணத்திணை அனுப்புவராக விண்ணப்பதாரியின் பெயரினையும் பணம் அனுப்புபவரின் முகவரி என்னும் இடத்தில் விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினையும், குறிப்பிட்டு விண்ணப்பப்படிவத்தினை நிரப்புதல் வேண்டும்.

7.0 கணினியுடன் நேரடித் தொடர்பு மூலம் (Online) பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பங்களை Submit செய்த பின்னர் உரிய விண்ணப்பதாரியிடம் உறுதிப்படுத்தும் இலக்கம் (Confirmation Number) வழங்கப்படுவதுடன், அதனை எதிர்காலத்தில் விபரம் அறியும் நடவடிக்கைகளின் பொருட்டு விண்ணப்பதாரி தம்வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பதாரியால் உரியவாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் கணினியுடன் நேரடித் தொடர்பு மூலம் (Online) சமர்ப்பித்த பின்னர் இணைய தளத்தில் உள்ள ஆலோசனைகளை கடைப்பிடிப்பதன் மூலம் தமக்குரிய பரீட்சை அனுமதி அட்டையை பெற்றுக்கொள்ளலாம். குறித்த அனுமதி அட்டையை அச்சிடப்பட்டு திணைக்களத் தலைவர் அல்லது அவரால் தமது அதிகாரத்தை கையளித்துள்ள பிரதிநிதித்துவ அலுவலரிடம் கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்திக்கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

8.0 விண்ணப்பம் சமர்ப்பிக்கும் நடைமுறை தொடர்பில் ஏதேனும் பிரச்சினை ஏற்படின் அது தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைக்கவும். 2018.03.16 ஆந் திகதி தொடக்கம் 2018.04.02 ஆந் திகதி வரை வாரத்தில் வேலை நாட்களில் மு. ப. 8.30 மணி தொடக்கம் பி. ப 4.30 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

9.0 பரீட்சை அனுமதி அட்டை பெற்றுள்ள அலுவலர்கள் பரீட்சையில் தோற்றக் கூடியதாக திணைக்களத் தலைவர்களால் கடமை விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரிகளின் பரீட்சார்த்த உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள

வேண்டுமாயின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ளலாம். பரீட்சைக்கு சமூகமளித்தலின் பொருட்டு பிரயாணச் செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

10.0 **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் பொருட்டும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடைகின்றவாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக பின்வரும் எழுத்தாவணங்களில் ஒன்றை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

i ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை;
ii செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டு.

மேற்படி ஆவணங்களை சமர்ப்பிக்க இயலாத விண்ணப்பத்தாரிகளின் பரீட்சார்த்த உரிமை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவனத்தின் பணிப்பளார் நாயகத்தின் தற்றுணிபின் பிரகாரம் இரத்துச் செய்யலாம்.

11.0 சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன்,உரிய சேவையில் சேர்வதற்காக பரீட்சைக்கு தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் இப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அலுவலர்களுக்கு முடியும். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்கு சேர்ந்த அலுவலர்களும் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரசகரும மொழியில் இப் பரீட்சைக்கு தோற்றலாம். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

12.0 தாம் விரும்புகின்றவாறு ஒவ்வொரு பாடங்களுக்கும் வெவ்வேறாகவும், ஒவ்வொன்றுக்கு வேறுபட்ட அமர்வுகளிலும் தோற்றுவதற்கு அலுவலர்களுக்கு முடியும்.

13.0 பரீட்சை பெறுபேறுகள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் வழங்கிய பின்னர், இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் பெறுபேறுகளை பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் இணையத் தளத்தில் வெளியிடப்படும். அந்த பெறுபேறுகளின் படி திணைக்களத் தலைவர்கள் அலுவலர்களின் சேவை நிரந்தரப்படுத்தல் மற்றும் தரமுயர்வுகள் என்பவற்றுக்கான பரிந்துரைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

14.0 **பரீட்சைத் திட்டம்**: ஒவ்வொரு வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் பொருட்டும் தோற்றுகின்ற அலுவலர்களுக்கான பாடங்களும் பாடவிதானங்களும் பின்வருமாறாகும்.

14.1 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் III இல் உள்ள அலுவலர்களுக்காள வினைத்திறன்காண்தடை தாண்டல் பரீட்சை. (சேவைப் பிரமாணக் குறிப்பில் 8 ஆவது அட்டவணை) இப் பரீட்சையில் தோற்றுவதற்கு இணைந்த சேவைக்குரிய இலங்கை தகவல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் III இல் உள்ள அலுவலராதல் வேண்டும்.

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் | சித்தி பெறுவதற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| தாபன விதிக் கோவை | 01 | 100 | 01 மணித்தியாலம் | 40 புள்ளிகள் |
| நிதி ஒழுங்குவிதிகள் | 02 | 100 | 01 மணித்தியாலம் | 40 புள்ளிகள் |

14.1.1 தாபன விதிக் கோவை (பாட இலக்கம் - 01)

தாபன விதிக் கோவை மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் தொடர்பாக அரச அலுவலருக்குரிய அடிப்படை அறிவை பரீட்சித்தல் இதன்போது எதிர்பார்க்கப்படுகிறது. வினாத்தாள் சுருக்கமான வினாக்களையும் கட்டமைவு முறையிலான வினாக்களையும் கொண்டமைந்திருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.1.2 நிதி ஒழுங்கு விதிகள் (பாட இலக்கம் - 02)

அரசாங்க அலுவலகங்களில் பிரயோகிக்கின்ற நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பான அடிப்படை அறிவு மற்றும் நிதிக் கட்டுப்பாட்டு புத்தகங்களில் அலுவல்கள் தொடர்பான அறிவு மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான அடிப்படை அறிவை அளவிடுதல் எதிர்பார்க்கப்படுகிறது. வினாத்தாள் சுருக்கமான வினாக்களையும்

கட்டமைவு முறையிலான வினாக்களையும் கொண்டமைந்திருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.2 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் II இற்கு உரியதான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை. (சேவைப் பிரமாணக் குறிப்பில் 9 ஆவது அட்டவணை) இப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக இணைந்த சேவைக்குரிய இலங்கை தகவல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் II இல் உள்ள அலுவலராதல் வேண்டும்.

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் | சித்தி பெறுவதற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| 1. அலுவலக முறைகள் மற்றும் நடை முறை திட்டம் | 03 | 100 | 02 மணித்தியாலம் | 40 |
| 2. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 04 | 100 | 03 மணித்தியாலம் | 40 |

14.2.1 அலுவலக முறைகள் மற்றும் நடைமுறை திட்டம் (பாட இலக்கம் 03) அரசாங்க அலுவலகங்களில் பிரயோகிக்கும் அலுவலக முறைகள் தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவை பரீட்சித்தல் மற்றும் அவற்றை பிரயோகிப்பதில் உள்ள ஆற்றலை பரீட்சித்தலும் எதிர்பார்க்கப்படுகிறது. இவ் வினாத்தாள் கட்டமைவு முறையிலான வினாக்களை கொண்டமைந்திருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.2.2 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (பாட இலக்கம் - 04) அரசாங்க அலுவலகங்களில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பொதுவான எண்ணக்கருக்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் சிறந்த முறையில் பிரயோகித்தல் தொடர்பான அறிவை பரீட்சிக்கப்படும்.

(அரசாங்க நிறுவனங்களில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பிரயோகிக்கும் முறை, கணினி வலையமைப்பு, தரவு தொடர்பாடல் தொடர்பான சிறந்த அறிவு, பொதுவான நோக்க மென்பொருள் தொடர்பான அறிவு, விசேடமாக பயன்படுத்தும் மென்பொருள், தரவு பாதுகாப்பும் மென்பொருள்களின் பாதுகாப்பும் கணினி முறைமைகளில் தொடர்ச்சியாக சேவை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தரவு பாதுகாப்பை அதிகரிப்பதற்கு மேற்கொள்ள முடியுமான அடிப்படை நடைமுறைகள்)

இவ் வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

பகுதி I - பல்தேர்வு வினாத்தாளாகும். காலம் 01 மணித்தியாலம். (40 புள்ளிகள்)
பகுதி II - காலம் 02 மணித்தியாலம் (60 புள்ளிகள்)

14.3 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் I இற்கு உரியதான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை. (சேவைப் பிரமாணக் குறிப்பில் 10 ஆவது அட்டவணை) இப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக இணைந்த சேவைக்குரிய இலங்கை தகவல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் I இல் அலுவலராதல் வேண்டும்.

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் | சித்தி பெறுவதற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| 1. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (எழுத்திலான பரீட்சை) | 05 | 50 | 01 மணித்தியாலம் | 20 |

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் | சித்தி பெறுவதற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| 2. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் செய் (முறையிலான பரீட்சை) | 06 | 50 | 01 மணித்தியாலம் | 20 |

14.3.1 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் – எழுத்திலான பரீட்சை (பாட இலக்கம் – 05)

I. அலுவலக நடவடிக்கைகளின் பொருட்டு மென் பொருள் பிரயோகமும் அது தொடர்பான அறிவும்

II. கணினி வலையமைப்பு தொடர்பான அறிவு

III. கணினி மென்பொருள்களின்/ வன்பொருள்களின் கோளாறுகளை அடையாளம் காணல் மற்றும் அவற்றை தீர்த்தல் தொடர்பான அறிவு

இவ்வினாத்தாள் சுருக்கமான வினாக்கள் மற்றும் கட்டுரை முறையிலான வினாக்களை கொண்டமைந் திருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.3.2 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் – செயன்முறைப் பயிற்சி (பாட எண் – 06)

I. அலுவலக நடவடிக்கைகளின் போது மென்பொருள் பயன்பாடு தொடர்பான நடைமுறை அறிவு.

II. கணினி வலையமைப்பு தொடர்பான நடைமுறை அறிவு.

III. கணினி மென்பொருள்/வன்பொருள் என்பவற்றில் குறைபாடுகளைக் கண்டறிதல் மற்றும் அவற்றை தீர்ப்பதற்கான நடைமுறை அறிவு.

14.4 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இற்குரிய வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (சேவைப் பிரமாணக் குறிப்பின் 11 ஆம் உப அட்டவணை). இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு, இணைந்த சேவைக்குரிய இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களாயிருத்தல் வேண்டும்.

| | பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் | சித்தி பெறுவதற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1. | தாபனவிதிக் கோவை | 07 | 100 | 02 மணித்தியாலம் | 40 |
| 2. | நிதிப் பிரமாணங்கள் | 08 | 100 | 02 மணித்தியாலம் | 40 |

14.4.1 தாபனவிதிக் கோவை (பாட இலக்கம் – 07)

தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகள் /அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் தொடர்பாக அலுவலரிடம் காணப்படுகின்ற பொதுவான அறிவையும் அவ்வறிவை நடைமுறை ரீதியாகப் பயன்படுத்தத்தக்க ஆற்றலும் இதன்போது பரிசீலிக்கப்படும். தாபன விதிக்கோவையின் I ஆவது, II ஆவது பாகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள அத்தியாயங்களிலிருந்தும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினது நடைமுறை விதிகளிலிருந்தும் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். இவ்வினாப்பத்திரமானது குறுகிய வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.4.2 நிதிப்பிரமாணங்கள் (பாட இலக்கம் - 08)

அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகின்ற நிதிப் பிரமாணங்கள் தொடர்பான அறிவு மற்றும் நிதிக் கட்டுப்பாட்டு பதிவேடுகளினது நடவடிக்கைகள் தொடர்பான விளக்கம் மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பாக அறிவு என்பன மதிப்பீடு செய்யப்படும். இவ்வினாப்பத்திரமானது குறுகிய வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.5 இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் I இற்குரிய வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை. (சேவைப் பிரமாணக்குறிப்பின் 12 ஆம் உப அட்டவணை) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக இணைந்த சேவைகளுக்குரிய இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் I இன் அலுவலராக இருத்தல் வேண்டும்.

| | பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் | சித்தி பெறுவதற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1. | அலுவலக முறைகள் மற்றும் அலுவலக நடைமுறைகள் | 09 | 100 | 02 மணித்தியாலம் | 40 |
| 2. | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் ஈ - அரசு | 10 | 100 | 03 மணித்தியாலம் | 40 |

14.5.1 அலுவலக முறைகள் மற்றும் அலுவலக நடைமுறைகள் (பாட இலக்கம் - 09)
அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படுகின்ற அலுவலக முறைகள் தொடர்பான பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் ஆற்றல் என்பன பரிசீலிக்கப்படும். இவ்வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்கள், குறுகிய வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.5.2 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் ஈ - அரசு (பாட இலக்கம் - 10)
இவ்வினாப்பத்திரமானது இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

பகுதி I - பல்தேர்வு வினாத்தாளாகும். காலம் 01 மணித்தியாலம். (40 புள்ளிகள்)
பகுதி II - கட்டமைவு முறையிலான கட்டுரை வினாத்தாளாகும் காலம் 02 மணித்தியாலம் (60 புள்ளிகள்)
(எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்)

இவ்வினாப்பத்திரமானது கீழே காட்டப்பட்டுள்ள விடயப் பரப்பை உள்ளடக்கியவாறு தயாரிக்கப்படும்.

(அ) தகவல் தொழில்நுட்ப கருத்திட்ட சுற்றோட்டத்தின் அடிப்படை பகுதிகளான முறைமைகள் கற்கை, கட்டமைப்பு பகுப்பாய்வு, கட்டமைப்பு உருவாக்கம், அதற்கான மென்பொருள் உருவாக்கம், அவற்றைப் பரிசீலித்தல், பயன்படுத்துனரைப் பெற்றுக் கொள்ளும் பரிசோதனைகள் என்பனவும் அவற்றுடன் தொடர்புடைய தொழில்நுட்பத் துறைகளான, அல்கோரிதம், HTML, XTML, php தரவு மற்றும் தகவல் பாதுகாப்பு, இடர் காரணமாக மீளவும் கட்டமைப்புக்களைத் தாபித்தல், புலமைச் சொத்துரிமை மற்றும் மென்பொருள் அனுமதிப்பத்திரம், சுதந்திர மற்றும் திறந்த மூலங்களிலான மென்பொருள்கள், இணைய 2.0 என்பன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவிற்குள் உள்ளடக்கப்படும்.

(ஆ) தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத்தை அரச துறையில் பயன்படுத்தும் முறைகள், அரச துறையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மிக வினைத்திறான சேவைகளை வழங்குதல், ஈ - அரச

முறைமைகளுக்குத் தேவையான அடிப்படை தொழில்நுட்ப தேவைப்பாடுகள், அரச தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினது ஆகக் கூடிய கட்டமைப்பிற்கான அடிப்படை அம்சங்கள், ஈ - அரச கட்டமைப்பிற்கான அடிப்படை அம்சங்கள், inter-operability என்பன ஈ - அரசு என்ற பகுதிக்குள் உள்ளடக்கப்படும்.

ஒவ்வொரு பரீட்சையினதும் ஒவ்வொரு பாடங்களும் நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கால அட்டவணை கீழே காட்டப்பட்டுள்ளது.

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட எண் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு 3 இன் தரம் III இற்குரிய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை. | தாபன விதிக்கோவை | 01 | 2018.04.08 | மு.ப. 9.00- மு.ப.10.00 |
| | | நிதிப் பிரமாணம் | 02 | 2018.04.08 | மு.ப. 10.30- மு.ப.11.30 |
| 02 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு 3 இன் தரம் II இற்குரிய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை. | அலுவலக முறைகள் மற்றும் நடைமுறைகள் | 03 | 2018.04.07 | பி.ப 1.00 - பி. ப 3.00 |
| | | தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் | 04 | 2018.04.07 | மு.ப. 9.00- ந.ப.12.00 |
| 03 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு 3 இன் தரம் II இற்குரிய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை. | தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (எழுத்துமூலப் பரீட்சை) | 05 | 2018.04.07 | மு.ப. 9.00- மு.ப.10.00 |
| | | தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (செயன்முறைப் பரீட்சை) | 06 | 2018.04.07 | மு.ப. 10.30- மு.ப.11.30 |
| 04 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இற்குரிய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை. | தாபன விதிக்கோவை | 07 | 2018.04.08 | மு.ப. 9.00- மு.ப.11.00 |
| | | நிதிப் பிரமாணம் | 08 | 2018.04.08 | மு.ப. 11.30- பி.ப. 1.30 |
| 05 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் I இற்குரிய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை. | அலுவலக முறைகளும் நடைமுறைகளும் | 09 | 2018.04.08 | பி.ப 1.00 - பி. ப 3.00 |
| | | தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் மற்றும் ஈ - அரசு | 10 | 2018.04.08 | மு.ப. 9.00- ந.ப.12.00 |

15.0 இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எந்தவொரு விடயம் தொடர்பாகவும், இணைந்த சேவைகள் பணிப் பாளரது தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

16.0 இவ் அறிவித்தலின் சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது வேறுபாடுகள் காணப்பட்டால் சிங்கள மொழிமூல அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2018, பெப்புருவரி 28.

3-673

## ஆயுர்வேத மருத்துவ சேவையின் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2017 (1)

இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையிலுள்ள மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை ஆயுர்வேத திணைக்களத்தினால் கொழும்பில் நாடத்தப்படவுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1. ஆயுர்வேத ஆணையாளரினால் பரீட்சை தொடர்பில் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக கடமைப்பட்டவராவர்.

2. விண்ணப்பமானது இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைவாக தகைமை பெற்றுள்ள பரீட்சார்த்திகள் தமது விண்ணபத்தை தயாரித்துக்கொள்ள வேண்டும் என்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2018.03.29 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேத திணைக்களம், நாவின்ன, மஹரகம" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பபடிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஆயுர்வேத மருத்துவ சேவையின் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை 2017(1)" என எழுதப்பட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதற் தடவையாக பரீட்சைக்கு தோற்றுவற்கு எவ்வித கட்டணமும் இல்லை. அதன் பின் தோற்றுவதற்கு ரூ 230.00 பெறுமதி முத்திரையும், ஒரு பாடத்திற்கு தோற்றுவதற்கு ரூபா 57.50 பெறுமதியான முத்திரையும் ஒட்டி அதன் மீதி கையொப்பமும் திகதியும் இட்டு அந்த முத்திரையை பாவனையற்றதாக்க வேண்டும். எவ்வித காரணத்தைக் கொண்டும் இப்பணம் மீள வழங்கப்படமாட்டாது.

3. ***பரீட்சார்த்திகளின் அடையாளம்***.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றவிருக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர் ஆளடையாளத்தை பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

   i. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையான அட்டை;
   ii. செல்லுபடியான கடவைச் சீட்டு.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அலுவலர்களுக்கு ஆயுர்வேத ஆணையாளரினால் பரீட்சைக்கான நேரசூசியின் பிரதியும் அனுமதி அட்டையும் அனுப்பப்படும் பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு அவர்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளை சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்கு தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிடின் அவர் "பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேத திணைக்களம், நாவின்ன, மஹரகம" எனும் முகவரிக்கு பின்வரும் விபரங்களுடன் அறிவிக்க வேண்டும்.

   (i) பரீட்சையின் பெயர்;
   (ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர்;
   (iii) பரீட்சார்த்தியின் முகவரி;
   (iv) விண்ணப்பம் அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகத்தின் பெயரும் பதிவிலக்கமும் திகதியும்.

5. ***பரீட்சைத் திட்டம்***
   (இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு ஏற்றவாறு)

   I. ***நிதிப்பிரமானங்கள்*** - பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணத்தின் தொகுதி I (10 அத்தியாயம் தவிர)

   II. ***தாபன விதிக்கோவை*** - பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள்

      i. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை தொகுதி I, II, III, IV, V, VI, VII, VIII, XII, XIII, XIV, XXIII, XXVII, XXIX, XXX, XXXII ஆகிய அத்தியாயங்கள்; அத்துடன்

      ii. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை தொகுதி II இல் XLVII மற்றும் XLVIII ஆவது அத்தியாயங்கள்.

   III. ***மருத்துவமனை நிருவாகம்*** - பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள்:-

      (i) மருத்துவமனை தொடர்பிலுள்ள பொதுவான விதிகளும் ஒழுங்கு விதிகளும்

(ii) மருத்துவமனையை சுத்தமாக வைத்திருத்தல்
(iii) நோயாளிகள் தொடர்பாக நடைமுறையிலுள்ள ஒழுங்கு விதிகள்
(iv) நோயாளிக்கான பொருத்தமான உணவுகளைப் பெற்றுக்கொள்ளும் விதிமுறைகள்
(v) மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் தொடக்கம் கனிஸ்ட ஊழியர் வரையான அவர்களது கடமைகள் தொடர்பாக உள்ள அறிவு
(vi) மருந்து உற்பத்தி நிலைய நிருவாகம்
(vii) நோயாளர்களை வைத்தியசாலைக்கு அனுமதிப்பது தொடர்பாக நடைமுறையில் உள்ள ஒழுங்கு விதிகள்
(viii) மருத்துவமனை தொடர்பில் பொதுவான நிருவாக நடவடிக்கைகள்
(ix) ஆயுர்வேத திணைக்களத்தின் பொதுவான நிருவாக ஒழுங்கு விதிகள்
(x) ஆயுர்வேத திணைக்களத்தின் களஞ்சியசாலையின் கணக்குகள் தொடர்பான ஒழுங்கு விதிகள்
(xi) ஆயுர்வேத செயல்முறைக் கோவை

IV. **அரச கரும மொழி வாய்மொழிப் பரீட்சை** - சிங்களம்/தமிழ் (15 நிமிடங்கள்)

(i) சிங்கள மொழி மூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களுக்கு

(அ) தமிழில் கேட்கப்படும் கேள்விகளுக்கு தமிழில் விடையளித்தல்
(ஆ) தமிழில் கேட்கப்படும் வாக்கியங்களை சிங்களத்தில் கூறுதல்
(இ) சிங்களத்தில் கேட்கப்படும் வாக்கியங்களை தமிழில் கூறுதல்

ii. தமிழ் மொழி மூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களுக்கு
(அ) சிங்களத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு சிங்களத்தில் விடையளித்தல்
(ஆ) தமிழில் கேட்கப்படும் வாக்கியங்களை சிங்களத்தில் கூறுதல்
(இ) சிங்களத்தில் கேட்கப்படும் வாக்கியங்களை தமிழில் கூறுதல்

பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகள் பெற வேண்டும்

ஜனக சுகததாச,
செயலாளர்,
சுகாதார, போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதார, போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
464, 4 ஆவது மாடி,
ரீ. பீ. ஜயா மாவத்தை,
கொழும்பு 10.
2018, பெப்புருவரி 22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஆயுர்வேத வைத்திய சேவையின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2017(1)**

சுட்டெண்: ☐
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் ☐

(பொருத்தமான எழுத்தை கூட்டில் இடவும்)
சிங்களம் - S தமிழ் - T

1) முதலெழுத்துக்களுடன் பெயர் : (MR/ MRS/ MISS) ______ .
(ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்)

2) முதலெழுத்துக்களுடன் பெயர் : (திரு/திருமதி/செல்வி) ______ .
(சிங்களத்தில்/தமிழில்)

3) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் :______ .
(ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்)

4) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் : ______ .
(சிங்களத்தில்/தமிழில்)

5) தேசிய ஆளடையாள அட்டை இல.: | | | | | | | | | | |
6) கடமைபுரியும் அலுவலகமும் விலாசமும் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) : ______ .
7) கடமைபுரியும் அலுவலகமும் விலாசமும் (சிங்களத்தில்/தமிழில்) : ______ .
8) தற்போதைய பதவி :-
i. பதவி:______ .
ii. நியமனக் கடிதத்தின் இலக்கமும் திகதியும் :______ .

9) நீங்கள் விண்ணப்பிக்கும் பாடம்/பாடங்கள்:-

| தொடர் இல. | பாடம் | பாட எண் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

10) நீங்கள் இதற்கு முன் பரீட்சைக்கு கீழ்வரும் பாடத்திற்கோ அல்லது பாடங்களிற்கோ தோற்றி சித்தியடைத்துள்ளீர்களா? (நிதிப் பிரமாணம்/ தாபனவிதிக் கோவை/ஆரோக்கியசாலை நிர்வாகம்/வாய்மொழிப் பரீட்சை (தமிழ்/சிங்களம்), அப்படியாயின் சுட்டெண்ணும் திகதியும் ______ .
11) தாங்கள் பரீட்சைக்கு தோற்றுவது முதற் தடவையா ? ______ .
பரீசைக்கு தோற்றுவது முதற்தடவை இல்லாவிடின் ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி.
முத்திரைக் கூடு.

| |
|---|
| முழுப் பரீட்சைக்காக ரூபா 230.00 பெறுமதியான முத்திரையும்,<br>ஒவ்வொரு பாடத்திற்கும் ரூபா 57.50 படியான முத்திரையும் இங்கே ஒட்டவும். |

குறிப்பு : பரீட்சார்த்திகள் உரிய பெறுமதியுடைய முத்திரைகளை ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இடுவதன் மூலம் அவற்றை பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும்.

மேலே வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை என்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் பரீட்சைக்கு தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும் வெளிப்படுத்துகிறேன். இங்கே ஒட்டப்படுள்ள ரூபா ................... பெறுமதியான முத்திரை/முத்திரைகள் செல்லுபடியானவை என்றும் முன்னர் உபயோகிக்கப்படாதவை என்றும் நான் உறுதி மொழிகின்றேன். இப்பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்க நான் உடன்படுகிறேன்.

______ ,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி : ______.

**குறிப்பு** :- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் முன்னிலையில் கையொப்பமிடல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

திரு./ திருமதி/ செல்வி ................................... எனது அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ..................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

______ ,
உறுதிசெய்பவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்

உறுதிசெய்பவரின் பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

03-731

## ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2018 பங்குனி

*2014.10.11 ஆந் திகதிய 1883/17 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக் கோவையின் 08 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு முன்பும், பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையில் உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்பும் நிர்வாக தரத்தை சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் தரத்தைச் சேர்ந்தவர்களும், விசேட வைத்திய நிபுணர் தரத்தைச் சேர்ந்தவர்களும் அந்நியமனம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து இரண்டு வருடங்களினுள் தேர்ச்சியடைய வேண்டிய திணைக்களப் பரீட்சை 2018/04/22 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் பிரவேசப் பத்திரத்துடன் அனுப்பி வைக்கப்படும்.*

*02.* ***தகைமைகள் :***

*உரிய பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களும், நியமனத்தில் உறுதிப்படுத்தப்படாத பல்சத்திர சிகிச்சை நிபுணர்களும் இந்தப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும். மேலும் இத் திணைக்களப் பரீட்சையினை பூரணப்படுத்தியிராத நிர்வாக தரத்தை சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் தரத்தைச் சேர்ந்தவர்களும், விசேட வைத்திய நிபுணர் தரத்தைச் சேர்ந்தவர்களும் இப்பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.*

*03.* ***விண்ணப்பங்கள் :***

*இச்சுற்று நிருபத்தில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போன்று விண்ணப்பதாரிகளினால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் 2018.03.23 திகதி அல்லது அதற்கு முன்னர் நிறுவனத் தலைவரிடம் பாரமளிக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ளதாக நிறுவனத் தலைவர் சான்றுப்படுத்திய பின் விண்ணப்பமானது சுகாதார அமைச்சு, கொழும்பு 10. இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, சுவசிரிபாய கட்டிடத்தில் பணிப்பாளர் (பரீட்சை) அவர்களுக்கு 2018.03.28 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலின் மூலம் அனுப்ப வேண்டும். தனது விண்ணப்பத்துடன் முகவரி எழுதப்பட்ட ரூபா 35.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9" X4" அளவுள்ள கடித உறைகள் 02 அனுப்ப வேண்டும். (இதில் விரும்பிய வகையில் அலுவலக முகவரி அல்லது சொந்த முகவரியை எழுதலாம்).*

***கவனிக்கவும் :*** *மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பம் A4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்படவேண்டும். முதற் பக்கத்தில் இலக்கம் 01 - 04 (உ) தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 04 (ஊ) - 09 தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.*

*04.* ***பரீட்சைக் கட்டணம் :***

I. *முதன் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25 வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை செல்லுபடி நீக்கம் புரியப்படுதல் வேண்டும்.*

II. *எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்க்கை கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலுத்தப்படவோ மாட்டாது.*

*05.* ***பரீட்சைக்கு உட்படுத்திக் கொள்தல்:***

(i) *ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அவ் அனுமதிப்பத்திரங்களை உரிய முறையில் நிரப்பி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கப்படாத எந்த ஒரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.*

(ii) *விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*(அ) தேசிய ஆளடையாள அட்டை ;*
*(ஆ) திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை;*

(இ) வலுவுள்ள அனுமதிப்பத்திரம் ;
(ஈ) வலுவுள்ள கடவுச்சீட்டு.

(iii) தவிர்க்க முடியாத காரணத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாதவிடத்து சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் தங்களினது பரீட்சைச் சுட்டெண், பரீட்சை நிலையம் என்பவற்றினை பெற்றுக்கொண்டு தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவரின் கடிதத்துடன் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில், இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுட்டெண்ணில் தாங்கள் பரீட்சையினை மேற்கொள்ள முடியும். அனுமதி அட்டை கிடைக்கப் பெற்றவர்கள் கட்டாயமாக கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு வருதல் வேண்டும். (கையொப்பத்தினை உறுதிப்படுத்திய கடிதம் அல்லது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை முன்னளிப்பு செய்யாதவர்கள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்)

(சுகாதார அமைச்சின் இணையத்தள முகவரி www.health.gov.lk )

06. **பரீட்சைத் திட்டம்**

இப்பரீட்சை மூன்று எழுத்து மூல கட்டுரை வினாப்பத்திரங்களையும் சிங்களம்/ தமிழ் வாய்மொழிப் பரீட்சை ஆகிய 04 பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்த பட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக் கொள்ளலாம்.

07. **பரீட்சைப் பாடத்திட்டம்**

**7.1 எழுத்துப் பரீட்சை:**

7.1.1 தாபன விதிக்கோவை:
நேரம் 02 மணித்தியாலயம் 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.
பாடவிதானம்

I. சுகாதார அமைச்சின் சுகாதாரத் திணைக்களத்தின் பொதுவான ஒழுங்குவிதிகள்.

II. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள்.

III. தாபனவிதிக்கோவை

I ஆம் பிரிவு: - VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XXIII, XXIV, XXV, XXVI,XXVII,XXVIII, XXX,XXXI,XXXII அத்தியாயங்கள்

II ஆம் பிரிவு: - XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்

7.1.2 வைத்தியசாலைகள், மருந்துசாலைகள் என்பனவற்றின் நிர்வாகம்
நேரம் 1 1/2 மணித்தியாலயம் 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**பாடவிதானம்**

சுகாதாரக் கைநூல்

I. வைத்தியசாலைகள், பொதுச் சுகாதார நிர்வாகம்

II ஆய்வுக் கூட சேவை முகாமைத்துவம்

III மருந்து முகாமைத்துவம்.

7.1.3 கணக்கியல்

நேரம் 02 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.
**பாடவிதானம்**

I. சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள்
II. சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைநூலில் நிதி தொடர்பான பந்தி.
III. சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதிப்பிரமாணம்.

| | | |
|---|---|---|
| I | ஆம் அத்தியாயம் | - நிதிப்பிரமாணம் 1, 2, 78 |
| II | ஆம் அத்தியாயம் | - நிதிப்பிரமாணம் 90, 91, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 113, 115, 118, 119 |
| III | ஆம் அத்தியாயம் | - நிதிப்பிரமாணம் 124, 125, 126, 127, 128, 131, 133, 134, 135, 136, 137, 138, 139, 140, 142, 143, 151, 152, 154, 155, 156, 189 |
| V | ஆம் அத்தியாயம் | - நிதிப்பிரமாணம் 200, 201, 215, 225, 238, 245, 255, 257, 260 |
| VI | ஆம் அத்தியாயம் | - நிதிப்பிரமாணம் 380, 381, 382, 383, 384, 385, 386, 388, 389, 390, 391, 392, 393, 394 |
| VII | ஆம் அத்தியாயம் | - நிதிப்பிரமாணம் 488, 493 |
| XIII | ஆம் அத்தியாயம் | - நிதிப்பிரமாணம் 715, 716, 756, 757, 758 |

பெறுகை வழிகாட்டிக் கோவை

1 ஆம் அத்தியாயம் - அனைத்து பிரிவுகளும்.
2 ஆம் அத்தியாயம் - 2.3, 2.4, 2.5, 2.6, 2.7, 2.8
3 ஆம் அத்தியாயம் - 3.1, 3.2, 3.3, 3.4, 3.5, 3.6, 3.7, 3.8, 3.9

7.1 **சிங்களம்/தமிழ் வாய்மொழிப் பரீட்சை:-**
சிங்களம்/தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையாகும். தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும்பொழுது மேலோங்கும் நிகழ்வுகள் தொடர்பாக சிங்கள மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழியிலும், தமிழ் மொழிமூல உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழியிலும் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல் (நேரம் 10 நிமிடம்)

08. **பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்:-**

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரனியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்திமீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. தயவுசெய்து இச் சுற்றுநிருபத்தை உங்கள் நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல்களை www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**குறிப்பு**.- இவ்வறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புக்களில் ஏதாவது ஒவ்வாமை காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவுடையதாகும்.

ஜனக சுகததாச,
செயலாளர்,
சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
"சுவசிரிபாய",
385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு - 10
2018.03.05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலகப் பிரயோகத்தின் பொருட்டு

**ஆரம்பத்தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்கான தினைக்களப் பரீட்சை - 2018 பங்குனி**

**01.** (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில்): ....................................................................................................
..........................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ( ஆங்கில கப்பிற்றல் எழுத்தில்):

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் (தமிழில்):..............................................................
..........................................................................................................

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

(ஆ). i. பதவி (உரிய கூண்டினுள் (✔) அடையாளமிடுக.

i. வைத்திய உத்தியோகத்தர் (ii) பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்

ii. தகுதிகூர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி - ........................................................................

iii. ஆரம்ப தரத்திற்கு/II ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி - .....................................................

02. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னால் உள்ள கூண்டினுள் (✔) அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் (✖) குறியை இடவும்.

வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம் தாபன விதிக்கோவை கணக்கியல்

சிங்கள வாய்மொழி தமிழ் வாய்மொழி

03. பரீட்சைக்குத் தோற்றும் மொழி (உரிய கூண்டினுள் (✔) அடையாளத்தை இடவும்)

சிங்களம் ஆங்கிலம் தமிழ்

04. (அ) (I) தற்பொழுது சேவையாற்றும் சேவை நிலையம். ........................................................................

(II) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது : மத்திய அரசின்கீழ்

மாகாண அரசின் கீழ்

(ஆ) (I) மாகாண சபையாயின் உரிய மாகாணம் : ....................................................................

(II) அதற்குரிய மாவட்டம் : ......................................................................................................

(இ). கையடக்கத் தொலைபேசி இல : | | | | | | | | | | |

(ஈ). தேசிய அடையாள அட்டை இலக்கம் | | | | | | | | | | | | |

(உ) கீழ்வரும் பரீட்சை நிலையங்களுள் விரும்பிய பரீட்சை நிலையம். ( தெரிவு செய்யும் பரீட்சை நிலையத்திற்கு போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அல்லது சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அழைக்கப்படுவர்) பொருத்தமான கூண்டினுள் சரி ( √ ) அடையாளமிடுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | | கந்தானை | | அம்பாந்தோட்டை | | அம்பாறை | |
| களுத்துறை | | காலி | | பதுளை | | வவுனியா | |
| குருநாகல் | | அனுராதபுரம் | | இரத்தினபுரி | | பொலனறுவை | |
| கண்டி | | மட்டக்களப்பு | | யாழ்ப்பாணம் | | திருகோணமலை | |

(ஊ). அனுமதிப்பத்திரம் அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9"x4"' அளவுள்ள ரூபா 35.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறைகள் 02 விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(எ). (i) அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) : ..........................................................................
..........................................................................................................................................................

(ii) அஞ்சல் முகவரி ( ஆங்கில பெரிய எழுத்தில்) : ..........................................................................
..........................................................................................................................................................

05. (அ). இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீர்களா? ..........................................................................

(ஆ) முதன் முறை அல்லாவிடின் முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளனவா? அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டியுள்ளதா ? ..........................................................................

முத்திரைக் கூண்டு (முத்திரையை ஒட்டி அதன் மீது கையொப்பமிடுக)

06. விண்ணப்பதாரியின் சான்றிதழ்:

எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில்

(i). இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன்முறையாக என்றபடியினால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும் முதன் முறை அல்லாதபடியால் ரூபா....... பெறுமதியான முத்திரைகள் ஒட்டியுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடி நீக்கம் செய்வதற்கு முன்பு பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(II). சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின், எனது பரீட்சார்த்தத் தன்மையை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்விதத் தீர்மானத்திற்கும் நான் அமைவேன் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :-----.

...................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

07. **சுயவிபரக் கோவையினை கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ்:**

இவ் விண்ணப்பமானது விண்ணப்பமுடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இத் திணைக்களப்

பரீட்சைக்கு தோற்றுவதற்கு தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இவ்விண்ணப்பப்பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

............................................ ..............................................
பெயர் கையொப்பமும் திகதியும்.

08. நிறுவனத் தலைவரின் சான்றிதழ்:

திருவாளர்/ திருமதி/ செல்வி ........................................................ என்பவர் எனது நிறுவனத்தில் சேவை புரியும் வைத்திய உத்தியோகத்தர்/பல் வைத்தியர் என்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை/அல்லாத படியால் ரூபா ............... பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் முத்திரை ஒட்ட வேண்டியதில்லை எனவும் விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரியின் பெயர்வழிக் கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்கு தகைமைகள் உண்டு எனவும் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :-----. .......................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்

09. விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்:

திருவாளர்/ திருமதி/ செல்வி ........................................................ என்பவர் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர் ஒருவராக/பல் சத்திரசிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும் விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ளவிபரங்கள்விண்ணப்பதாரியின்பெயர்வழிக்கோவையிலுள்ளவிபரங்களின்படிபிழையற்றவையெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................................
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு /
விசேட இயக்கத் தலைவரின் கையொப்பம்,
(முத்திரை இடப்படுதல் வேண்டும்).

திகதி:-----.
( * தேவையற்றவற்றைக் கீறிவிடவும்)

3-767

---

**இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் III ஆந் தரம், 1 ஆம் வகுப்பின் II ஆந் தரம் மற்றும் 1 ஆம் வகுப்பின் I ஆந் தரத்தினைக் கொண்ட அலுவலர்களுக்கான வினைத்திறன் காண்தடை தாண்டல் பரீட்சை - 2017 (II)**

1.0 இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் III ஆந் தரம், 1 ஆம் வகுப்பின் II ஆந் தரம் மற்றும் 1 ஆம் வகுப்பின் I ஆந் தரத்தினையுடைய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை - 2017(II) அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் கண்காணிப்பின் கீழ் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2018, ஏப்பிறல் மாதம் 07 மற்றும் 2018, ஏப்பிறல் மாதம் 08 ஆகிய வார இறுதி நாட்களில் கொழும்பில் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றது.

2.0 இப்பரீட்சை 2014.12.26 ஆந் திகதிய 1895/26 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பச் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப நடாத்தப்படும்.

3.0 மேற்குறிப்பிட்ட சேவைகளுக்கு உரித்துடையதாக நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை கீழ்வருமாறு அமையப்பெற்றுள்ளது.

| தொடரிலக்கம் | பரீட்சையின் பெயர் | குறியீட்டுப் பெயர் |
|---|---|---|
| 01. | இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் III ஆந் தரத்தின் அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை | SLICT 1 (III) |

| தொடரிலக்கம் | பரீட்சையின் பெயர் | குறியீட்டுப் பெயர் |
|---|---|---|
| 02. | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் II ஆந் தரத்தின் அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை | SLICT 1 (II) |
| 03. | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் I ஆந் தரத்தின் அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை | SLICT 1 (I) |

4.0 இப்பரீட்சை தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். இச்சட்டங்களை மீறுமிடத்து ஒழுக்காற்று அதிகாரியினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் கட்டுப்பட வேண்டிய நிலை உருவாகும்.

5.0 இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள் இணையத்தளத்தின் ஊடாக நிகழ்நிலை முறையில் (Online) இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk இன் மெனு தாவலினால் Examination உப மெனுவினை திறந்து தமக்கு உரிய பரீட்சையினைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் பரீட்சை விண்ணப்பத்தினை நிரப்புவதற்கு முடியும். விண்ணப்பத்தினை நிரப்புதல் 2018.03.16 ஆந் திகதி மு. ப. 8.00 முதல் 2018.04.02 ஆந் திகதி நள்ளிரவு 12.00 மணி வரையான காலப்பகுதியினுள் மட்டுமே முடியுமாக இருக்கும்.

6.0 **பரீட்சைக் கட்டணம்** – முதற் தடவையாக இப்பரீட்சைக்கு தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணம் எதனையும் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. எவ்வாறாயினும், இதற்குப் பின்னரான தடவைகளில் அலுவலர்களினால் ஒரு பாடத்துக்கு மேல் தோற்றுவதாயின் ரூபா. 500 ஐ பரீட்சைக் கட்டணமாகவும், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் கட்டணமாக ரூபா 300 இனையும் செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்தினை இலங்கை பூராக அமைந்துள்ள எந்தவொரு தபாலகத்தின் மூலம் (உப தபாலகங்கள் தவிர) அல்லது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகத்தின் உத்தியோகபூவ இணையத்தளமான www.slida.lk ஊடாக கடன் அட்டை மூலமாக (Credit cards) 'SLIDA' விற்கு செலுத்தப்பட வேண்டும் என்பதோடு அச்செலுத்தலிற்கு உரித்துடைய பற்றுச்சீட்டின் இலக்கத்தினை விண்ணபத்தில் உரிய இடத்தில் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த தபாலகத்தில் 'SLIDA' கணக்கிற்கு பணம் செலுத்துவதற்கு காசுக்கட்டளை விண்ணப்பத்தினை (அ.அ.சீ85) ஆம் இலக்கத்துடைய மாதிரிப்படிவத்தினை நிரப்பும் போது, பணத்தினைப் பெற்றுக்கொள்பவர் 'SLIDA' எனவும், பணத்தினைப் பெற்றுக்கொள்பவரின் முகவரி என்னும் இடத்தில் உமக்கு உரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரினையும் குறிப்பிடவும். (குறியீட்டுப் பெயர்கள் 03 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்.)

மேலும் கணக்கிற்கு பணம் செலுத்தும் போது பணத்தினை அனுப்புபவராக விண்ணப்பதாரியின் பெயரினையும், பணம் அனுப்புபவரின் முகவரி என்னும் இடத்தில் விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினையும், குறிப்பிட்டு விண்ணப்பப்படிவத்தினை நிரப்புதல் வேண்டும்.

7.0 Online முறையில் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்கள் Submit செய்ததன் பின்னர் உரிய விண்ணப்பதாரியிடம் உறுதிப்படுத்தும் இலக்கமொன்று (Confirmation Number) பெற்றுக்கொடுக்கப்படும் என்பதோடு அவ்விலக்கத்தினை எதிர்வரும் தொடர்பு நடவடிக்கைகளுக்காக விண்ணப்பதாரி தன்னகத்தே வைத்திருத்தல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிரப்பப்பட்ட விண்ணப்பம் நிகழ்நிலையின் (Online) மூலம் அனுப்பியதன் பின்னர் கிடைக்கப்பெறும் இணையத்தளப் பக்கத்தில் காணப்படும் அறிவுரைகளைப் பின்பற்றுவதனால் தமக்குரிய பரீட்சை அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முடியும். அவ்வனுமதிப்பத்திரத்தினை அச்சிட்டு திணைக்கள தலைவர் அல்லது அவர் தன் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பிரதி அலுவலரொருவர் மூலம் தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்திய அனுமதிப் பத்திரத்தினை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

8.0 விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிப்பது தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் எழும்போது அது தொடர்பான விசாரணைக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக தொலைபேசி இலக்கத்திற்கு (011-5980236) 2018.03.16 ஆம் திகதி முதல் 2018.04.02 ஆந் திகதி வரை வார நாட்களில் மு.ப 8.30 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையில் அழைப்பினை மேற்கொள்ளலாம்.

9.0 பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெற்ற அலுவலர்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு முடியுமான வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை விடுமுறையை பெற்றுக்கொடுத்தல் வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றுவதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு அவசியப்படுமாயின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். பிரயாணக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது.

10.0 **பரீட்சார்த்தியின் அடையாளம்.**– பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியுறுகின்ற விதத்தில் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்:-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஒன்றினை சமர்ப்பிக்க முடியாத பட்சத்தில் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தம் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிவின் படி இரத்துச் செய்ய முடியும்.

11.0 பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும் என்பதோடு குறித்த சேவைக்கு உள்வாங்கும் பரீட்சைக்கு தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் இப்பரீட்சைக்கு தோற்ற முடியும். போட்டிப் பரீட்சையின்றி இணைத்துக் கொள்ளப்பட்ட அலுவலர்களுக்கு தான் கல்வி கற்ற மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியில் இப்பரீட்சைக்கு தோற்ற முடியும். பரீட்சார்த்தி ஒருவருக்கு தனது விண்ணபப்பபடிவத்தில் குறிப்பிடுகின்ற பரீட்சை மொழி மூலத்தினை மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

12.0 தான் விரும்பிய ஒவ்வொரு பாடத்திற்கான வெவ்வேறு மற்றும் ஒன்றுக்கொன்று வித்தியாசமான தடவைகளில் தோற்ற அலுவலரினால் முடியும்.

13.0 பரீட்சை பெறுபேறுகள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டதன் பின்னர் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் பெறுபேறுகள் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சரின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். அப் பெறுபேறுகளுக்கு ஏற்ப குறித்த திணைக்களத் தலைவர்கள் அலுவலர்களின் சேவையினை உறுதிப்படுத்தல் மற்றும் பதவியுயர்வு நடவடிக்கைகளுக்கான பரிந்துரை முன்வைக்கப்படல் வேண்டும்.

14.0 **பரீட்சை நடைமுறைகள்**.–ஒவ்வோர் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைக்கு தோற்ற முடியுமான அலுவலர்களுக்கான பாடங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் கீழ்வருமாறு காணப்படுகின்றன.

14.1 இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் 1 ஆம் வகுப்பின் III ஆந் தரத்துடைய அலுவலர் களுக்கான வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை (சேவை பிரமாணக் குறிப்பின் 13 ஆவது அட்டவணை) இப் பரீட்சையில் தோற்றுவதற்காக அரச சேவைக்குரிய இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 7 ஆம் வகுப்பின் III ஆந் தரத்துடைய அலுவலர்களாக இருத்தல் வேண்டும்.

| பாடங்கள் | பாட இலக்கம் | புள்ளி | காலம் | சித்தி பெறுவதற்காக பெற வேண்டிய ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| தாபன விதிக் கோவை மற்றும் நிர்வாகம் | 01 | 100 | 03 மணித்தியாலம் | 40 |
| நிதிப் பிரமாணம் மற்றும் அரசப் பிரிவின் நிதி முகாமைத்துவம் | 02 | 100 | 03 மணித்தியாலம் | 40 |
| முகாமைத்துவமும் ஒழுங்கமைப்பும் | 03 | 100 | 03 மணித்தியாலம் | 40 |

14.1.1 தாபன விதிக் கோவை மற்றும் நிர்வாகம் (பாட இலக்கம் - 01)

கீழ்க் காணப்படும் விடயங்களை உள்ளடக்கியதோர் வினாப்பத்திரமாகும்:-

1. அலுவலகம் மற்றும் வெளிக்கள நடவடிக்கையினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஒழுங்கமைப்பு
2. தாபன விதிக்கோவையின் கீழ்க் குறிப்பிடப்படும் அத்தியாயங்கள் 1, II, III, V, VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XL VII மற்றும் XLVII.
3. அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்.

இவ்வினாப்பத்திரம் கட்டுரை வடிவிலான வினாக்களைக் கொண்டுள்ளது.

14.1.2 நிதிப் பிரமாணம் மற்றும் அரசாங்க பிரிவின் நிதி முகாமைத்துவம் (பாட இலக்கம் - 02)

கீழ்க் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையிலமைந்த வினாப்பத்திரமாகும்.

(அ) இலங்கையில் பிசுக்கால் ஆட்சி அரச நிதி முகாமைத்துவம் தொடர்பிலான அறிக்கை அரசியலமைப்பின் ஏற்பாடுகள், அரச நிதி தொடர்பான பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு, நிதியம் என்பதன் விளக்கம், திரட்டு நிதி மற்றும் அதன் செயற்பாடுகள் ஒதுக்கீட்டுக் கணக்கின் நோக்கங்கள் மற்றும் ஒதுக்கீட்டு முறைகள், எதிர்பாராப் பின்னிகழ்ச்சிச் செலவு நிதியம், பிற நிதியங்களும் அவற்றின் செயற்பாடுகளும், அரச வருமானங்கள், நிதி அமைச்சரின் தத்துவங்களும் பணிகளும், திறைசேரியின் தத்துவங்களும் பணிகளும் ஆணைச்சீட்டுக்களும் கட்டு நிதி அதிகாரமும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தத்துவங்களும் பணிகளும், அரசாங்க செலவினங்கள் மீதான குழு அரசாங்க தொழில் முயற்சிகள் மீதான குழு

(ஆ) கணக்கீட்டு உத்தியோகத்தர், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் வருவாய்க் கணக்கீட்டு அலுவலர்களை நியமித்தல், அவர்களின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

(இ) உள்ளகக் கணக்காய்வு

(ஈ) அரச செலவீனங்களைத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், ஒழுங்கமைப்பின் நோக்கங்கள் மற்றும் பணிகளை இனங்காணல், அரசாங்க கொள்கைகள், குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் வேலை நிகழ்ச்சித்திட்டங்களை இனங்காணல் அபிவிருத்தி செயற்திட்டங்கள், நிகழ்ச்சிகளைத் திட்டமிடல் மற்றும் மதிப்பிடுதல் மற்றும் முன்னிலைப்படுத்தல் வருடாந்த வருமானங்கள் மற்றும் செலவினம் பற்றிய மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் இறுதி முடிவினைப் பெறுதல்.

(உ) அங்கீகரிக்கப்பட்ட செலவு மதிப்பீடுகளில் மாற்றங்கள் செய்தல், வகைமாற்று நடவடிக்கைகளின் பிரயோகம், அரசாங்கப் பிரிவின் ஆளணியினர் மற்றும் சம்பள முகாமைத்துவம், மொத்தக் கிரய மதிப்பீடுகளும் மீளாய்வுகளும், குறைநிரப்பு மதிப்பீடு.

(ஊ) அரச சொத்துக்களின் நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்களும்

(எ) நானாவித கணக்கு நடவடிக்கைகள்

(ஏ) அரசாங்கக் கட்டுப்பாடு பொருட்டு பணிகளைக் கையளித்தல்

(ஐ) அரச நிதிகளின் பொறுப்பு மற்றும் வங்கிக் கணக்கு நடைமுறைகள்.

(ஒ) அரசின் வழங்கற் செயற்பாட்டு நடைமுறைகள் பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளைப் பெற்றுக் கொள்ளல், பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் தொகுப்பு, நியமனங்கள், அதிகாரங்கள் மற்றும் பணிகள், பெறுகை மதிப்பீட்டின் செயற்பாட்டு நடைமுறைகள், வெளிநாட்டு நன்கொடைகள் மீது செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களின் முகாமைத்துவம்.

இவ்வினாப்பத்திரம் கட்டுரை வடிவிலான வினாக்களினை உள்ளடக்கியுள்ளது.

14.1.3 முகாமைத்துவமும் ஒழுங்கமைப்பும் (பாட இலக்கம் - 03)

கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களின் அடிப்படையில் அமைந்ததோர் வினாப்பத்திரமாகும்.

(அ) முகாமைத்துவம் மற்றும் ஒழுங்கமைப்பு பற்றிய கோட்பாடுகள்

(ஆ) அக்கோட்பாடுகள் அரசுப் பிரிவுகளில் தோற்றுவிக்கும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள்

(இ) முகாமைத்துவம் தொடர்பான நவீன முறைமைகள் மற்றும் நுட்பங்கள் இவ்வினாப்பத்திரம் கட்டுரை வடிவிலான வினாக்களினை உள்ளடக்கியுள்ளது.

14.2 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் 1 ஆம் வகுப்பின் II ஆந் தரத்துக்குரிய வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை. (சேவைப் பிரமாணக் குறிப்பின் 14 ஆம் அட்டவணை) இப் பரீட்சையில் தோற்றுவதற்காக அரச சேவைக்குரிய இலங்கைத் தகவல் தொழில் நுட்ப சேவையின் 1 ஆம் வகுப்பின் II ஆம் தரத்தினையுடைய அலுவலர்களாக இருத்தல் வேண்டும்.

| பாடங்கள் | | பாட இலக்கம் | புள்ளி | காலம் | சித்தியெய்துவதற்கு பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|---|
| அலுவலக முகாமைத்துவம் | | 04 | 100 | 01 மணித்தியாலம் | 40 |
| ஈ-அரசாங்க எண்ணக்கரு மற்றும் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவம் | I ஆம் வினாப்பத்திரம் பல்தேர்வு | 05-I | 40 | 01 மணித்தியாலம் | 16 |
| | II ஆம் வினாப்பத்திரம் கட்டுரை | 05-II | 60 | 01 மணித்தியாலம் | 24 |

14.2.1 அலுவலக முகாமைத்துவம் (பாட இலக்கம் - 04)

அரசாங்க பிரிவின் அலுவலகம் மனித மற்றும் பௌதீக வளங்களின் முகாமைத்துவம் தொடர்பாக வழங்கப்படும். விடய ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு பதிலளித்தல்.

14.2.2. ஈ-அரசாங்க எண்ணக்கரு மற்றும் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவம் (பாட இலக்கம் - 05)

(அ) I ஆம் வினாப்பத்திரம் - பல் தேர்வு (பாட இலக்கம் 05-I) ஈ-அரசாங்க முறையின் பரிணாமம், அதன் காலங்கள், ஈ-அரசாங்க அடிப்படைப் பிரிவுகள், ஈ-அரசாங்க சேவைகள், (E-service) மற்றும் ஈ-அரசாங்க கருத்திட்டங்கள், அரசாங்கத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் கட்டுமானம், ஈ-அரசாங்க முறைமையை வெற்றியடையச் செய்வதற்கான உறுதியான காரணிகள், ஈ-அரசாங்க முகாமைத்துவம், இணைந்து செயலாற்றும் தன்மை (Interoperability) மற்றும் சேவை சார்ந்த கணனி வடிவமைப்பு (Service Oriented Architecture) ஈ-அரசாங்க முறை (E-Government) எண்ணக்கருவினுள் உள்ளடக்கப்படும்.

(ஆ) II ஆம் வினாப்பத்திரம் - கட்டுரை (பாட இலக்கம் 05 - II) தகவல் தொழில்நுட்பத்தின் வாழ்க்கை வட்டம், அதன் ஒவ்வோர் சந்தர்ப்பங்களிலுமான முக்கியத்துவம் மற்றும் அதற்கு தேவைப்படும் வளங்களின் விஷேட தன்மை, தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத்தின் அடிப்படை கோட்பாடுகள், தகவல் தொழில்நுட்ப வளங்களின் முகாமைத்துவம் தகவல் தொழில்நுட்ப செயற்திட்டங்களின் இடர்கள் மற்றும் அவற்றினைக் குறைத்துக் கொள்ளல் என்பன தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத்தினில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

14.3 இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பின் I ஆந் தரத்தையுடைய அலுவலர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை (சேவைப் பிரமாணக் குறிப்பின் 15 ஆம் அட்டவணை) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அரச சேவைக்குரிய இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் I ஆந் தரத்துடைய அலுவலர்களாக இருத்தல் வேண்டும்.

| பாடங்கள் | | பாட இலக் கம் | புள்ளிகள் | காலம் | சித்தி பெறுவதற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|---|
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப செயற்றிட்டம் | I. செயற்றிட்ட அறிக்கை | 06 -I | 60 | - | 30 |
| | II, செயற்றிட்ட அறிக்கையை சமர்ப்பித்தல் | 06 -II | 40 | பரீட்சைக் குழுவிடம் சமர்ப்பிப்பதற்கும் விடையளித்தலுக்கும் 30 நிமிடங்கள் | 20 |

14.3.1 செயற்றிட்ட அறிக்கை (பாட இலக்கம் 06 -I)

இலங்கையின் அரச துறை அலுவலகங்களது வினைத்திறனை அதிகரிப்பதற்காக நடைமுறையில் உட்படுத்தப்படக்கூடிய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய 15,000 சொற்களுக்குக் குறையாத (பதினைந்தாயிரம்) செயற்றிட்ட அறிக்கையொன்றைத் தயாரித்தல்.

14.3.2. செயற்றிட்ட அறிக்கையை சமர்ப்பித்தல் (பாட இலக்கம் - 06-II)

பரீட்சைக் குழுவிடம் சமர்ப்பித்தலும் பரீட்சைக் குழுவால் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு விடையளித்தலும்

ஒவ்வொரு பரீட்சை மற்றும் பாடத்தினை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள நேர அட்டவணை கீழே காட்டப்பட்டுள்ளது.

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடங்கள் | | பாட எண் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் III ஆந் தரத்துடைய அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சை. | தாபன விதிக்கோவை மற்றும் நிர்வாகம் | | 01 | 2018.04.07 | மு.ப. 9.00- மதியம் 12.00 |
| | | நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் அரசப் பிரிவின் நிதி முகாமைத்துவம் | | 02 | 2018.04.07 | பி.ப. 12.30- பி.ப.3.30 |
| | | முகாமைத்துவம் மற்றும் தாபனங்கள் | | 03 | 2018.04.08 | மு.ப 9.00 - மதியம் 12.00 |
| 02 | இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 வகுப்பின் II ஆம் தரத்துடைய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை. | அலுவலக முகாமைத்துவம் | | 04 | 2018.04.08 | மு.ப 9.00 - மு. ப 10.00 |
| | | ஈ-அரசாங்க எண்ணக்கரு மற்றும் தகவல் தொழில் நுட்ப முகாமைத் துவம் | I ஆம் வினாப் பத்திரம் - பல்தேர்வு | 05-I | 2018.04.08 | மு.ப. 10.30- பி.ப.12.30 |
| | | | II ஆம் வினாப் பத்திரம் - கட்டுரை | 05-II | | |
| 03 | இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் 1ஆம்வகுப்பின் I ஆந் தரத்துடைய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண்தடை தாண்டல் பரீட்சை. | தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில் நுட்ப செயற் றிட்டம் | செயற்றிட்ட அறிக்கை | 06-I | செயற்றிட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் கையளிக்கும் திகதி தொடர்பாகவும் செயற்றிட்ட அறிக்கை சமர்ப்பிப்பது தொடர்பாகவும் விண்ணப்பப்படிவம் கையளிக் கும் இறுதித் திகதிக்குப் பின் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பதாரி களுக்கு அறிவிக்கப்படும். | |
| | | | செயற்றிட்ட அறிக் கையை சமர்ப் பித்தல் | 06-II | | |

15.0 இவ் அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எந்தவொரு விடயம் தொடர்பாகவும், பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

16.0 இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2018, பெப்புருவரி 23.

3-672

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.